9.3.2015

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## <u>விருதுநகர் பகுதியில் மக்காச்சோள அறுவடை மும்முரம்</u>



விருதுநகர் பகுதியில் அறுவடை வாகனம் கிடைக்காத காரணத்தால் கிடைக்கிற கூலி ஆள்கள் மூலம் மக்காச்சோளம் அறுவடையில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர். விருதுநகர் பகுதியில் வெள்ளூர், ஆமத்தூர், கன்னிசேரி, புதூர், நாராணபுரம், எல்கைபட்டி, சின்னப்பநாயக்கன்பட்டி, செங்கோட்டை, குமாரபுரம், கவுண்டம்பட்டி, குமிழங்குளம், புதுக்கோட்டை, புதுப்பட்டி, சித்தமநாயக்கன்பட்டி, வாடியூர், முதலிபட்டி, புல்லலக்கோட்டை உள்பட பல்வேறு கிராமங்களில் நூற்றுக்கணக்கான ஹெக்டேரில் மக்காச்சோளம் பயிரிட்டுள்ளனர். தற்போது, நன்றாக விளைந்துள்ளதால் அறுவடை மும்முரமாக நடந்து வருகிறது. அதிலும், ஒரே நேரத்தில் அனைவரும் அறுவடை பணிகளை செய்து வருவதால் அறுவடை வாகனங்களுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. இதனால் இரவும், பகலும் தொடர்ந்து அறுவடை பணிகளில் வாகனங்களை ஈடுபடுத்தி வருகின்றனர். இது குறித்து சத்திரரெட்டிபட்டி விவசாயி சண்முகராஜன் என்பவர் கூறுகையில், மக்காச்சோள பயிர் நன்றாக விளைந்து தட்டை காயந்த நிலையில் உள்ளது. இந்நிலையில் மழை பெய்வதற்கு முன்பாக குறிப்பிட்ட நாள்களுக்குள் அறுவடை செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அறுவடை வாகனங்கள் மூலம் மக்காச்சோள அறுவடை செய்ய ஒரு மணிநேரத்திற்கு ரூ.1500 ஆகிறது. இதற்காக காத்து இருக்க வேண்டிய நிலையுள்ளது. அதற்காக கிடைக்கிற கூலி ஆள்கள் மூலம் கதிர்களை

பிரித்து எடுத்து களத்தில் சேர்த்தால் தான் போட்ட முதலை எடுக்க முடியும் என அவர் தெரிவித்தார்.

## மீன் வளர்ப்போர் அரசு முகமையில்உறுப்பினராக அறிவுறுத்தல்

அரசின் நலத்திட்டங்களைப் பெற மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையில் தங்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி வெளியிட்ட செய்தி: நாமக்கல் மாவட்டத்தில் புதிதாக மாவட்ட மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைத் தொடங்கப்படுகிறது. இந்த முகமையில், மீன் வளர்ப்போரை அடையாளங் கண்டு, அவர்களை உறுப்பினர்களாகச் சேர்க்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தின் மூலம், மானிய விலையில் மீன் குஞ்சு விற்பனை, மீன் வளத்துறை சார்பான நலத்திட்ட உதவிகள் பெற பணிகள் மேற்கொள்ளப்படும். எனவே, மீன் வளர்ப்போர் தங்களது பெயரைப் பதிவு செய்து, உறுப்பினராக்கிக் கொள்ள வேண்டும். மேலும் விவரங்களுக்கு 04298 - 244045 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## பிரிக்ஸ் நாடுகளின் சந்திப்பில் இந்திய வேளாண் அமைச்சர்

பிரேசிலில், வரும் 11-13ஆம் தேதிகளில் நடைபெற உள்ள பிரிக்ஸ் நாடுகளின் வேளாண்துறை சந்திப்பில் மத்திய விவசாய அமைச்சர் ராதா மோகன் சிங் கலந்து கொள்கிறார். பிரிக்ஸ் கூட்டமைப்பில் பிரேசில், ரஷியா, இந்தியா, சீனா, தென் ஆப்ரிக்கா ஆகிய நாடுகள் இடம் பெற்றுள்ளன. இந்நிலையில், மத்திய வேளாண் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளதாவது: பிரேசில் தலைநகர் பிரேசிலியாவில், பிரிக்ஸ் நாடுகளின் விவசாயம் மற்றும் விவசாயிகளின் வளர்ச்சிக்கான அமைச்சர்கள் சந்திப்பு நிகழ உள்ளது. விவசாயம் மற்றும் உணவுப் பாதுகாப்பு விஷயங்களில் பிரேசில், ரஷியா, இந்தியா, சீனா, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகள் சந்தித்த சவால்கள், வாய்ப்புகள்

குறித்து இந்தச் சந்திப்பில் கவனம் செலுத்தப்படும். 2012-16 காலகட்டத்தில் விவசாயத்தில் ஒத்துழைத்துச் செயல்படுத்துவதற்கென, கடந்த 2011ஆம் ஆண்டில் பிரிக்ஸ் நாடுகளால் செயல் திட்டம் வகுக்கப்பட்டது. தங்களுக்குள் வரையறுத்து ஏற்றுக்கொண்ட செயல் திட்டத்தை, இக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகள் செயல்படுத்திய விதம் குறித்து இந்தச் சந்திப்பில் பரிசீலனை செய்யப்படும்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>மீனவர் வலையில்அதிகம் சிக்கும் 'கவளை' மீன்கள்</u>**

பழவேற்காடு:பழவேற்காடு கடலில், மீன்பிடி தொழில் செய்யும் மீனவர்கள் வலையில் 'கவளை' வகை மீன்கள், அதிக அளவில் கிடைக்கின்றன. பழவேற்காடு, கூனங்குப்பம், அரங்கம், லைட் அவுஸ்குப்பம் உள்ளிட்ட, கடலோர மீனவர்கள் கடலில் மீன்பிடி தொழில் செய்கின்றனர். மீனவர்கள் வலையில், சில தினங்களாக 'கவளை' வகை மீன்கள் அதிகளவில் சிக்குகின்றன.இவ்வகை மீன்கள், 15 நாட்களாக கிடைப்பதாகவும், ஏப்ரல் மாத இறுதிவரை, இவை கிடைக்கும் எனவும், மீனவர்கள் கூறுகின்றனர். அதிகாலை, 2:00 மணிக்கு படகுகளில் கடலுக்கு செல்லும் மீனவர்கள், பகல் 12:00 மணிக்கு, இவ்வகை மீன்களுடன் கரை திரும்புகின்றனர். ஒவ்வொரு படகிலும், 850 முதல் 1,000 கிலோ வரை, இவ்வகை மீன்கள் இருக்கின்றன. அவற்றை ஏரிக்கரைகளில் தயாராக இருக்கும் மொத்த வியாபாரிகளிடம், 50 கிலோ கொண்ட ஒரு பெட்டி, 800 முதல் 1000 ரூபாய் வரை, விலைபேசி விற்பனை செய்கின்றனர்.மீன்களின் வளர்ச்சியை பொறுத்து, அதன் விலை நிர்ணயிக்கப்படுகிறது. மொத்த வியாபாரிகள் மீன்களை

பிளாஸ்டிக் பெட்டிகளில் அடைத்து, அதன் மீது ஐஸ் கட்டிகளை கொட்டி, அதற்கான பிரத்யோக வாகனங்கள் மூலம், கேரளா, பாண்டிச்சேரி உள்ளிட்ட வெளிமாநிலங்களுக்கு கொண்டு செல்கின்றனர்.

## விவசாய கண்டுணர்வு சுற்றுலா

விக்கிரவாண்டி: விக்கிரவாண்டி வட்டார அட்மா திட்ட விவசாயிகள் மாவட்ட கண்டுணர்வு சுற்றுலா சென்றனர். விக்கிரவாண்டி வட்டார வேளாண்மை விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் மூலம் விவசாயிகள் மாவட்ட கண்டுணர்வு சுற்றுலாவாக வட்டார தொழில் நுட்ப மேலாளர் சாம்பசிவம் தலைமையில் திண்டிவனம் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்டனர் . எண்ணெய் வித்துக்கள் பயிர் சாகுபடியில் உயர் ரகம், நோய், பூச்சி மேலாண்மை பற்றி விவசாயி களுக்கு உதவி பேராசிரியர் நடராஜ் விளக்கமளித்தார். வேளாண்மை அலுவலர் விஜயசந்தர் மற்றும் வட்டாரத்திலுள்ள விவசாயிகள் 50 பேர் சுற்றுலாவில் பங்கேற்றனர் .

## தேவாரம் பகுதியில் தொடர்மழை உரமிடும் பணியில் விவசாயிகள்

தேவாரம் : தேவாரம் பகுதியில் பெய்த தொடர் மழையால் உரமிடும் பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். தேவாரம் சாக்குலூத்து, பெரம்புவெட்டி, கோயில்காடு, பொன்குன்றம் உட்பட மலையடிவாரப்பகுதியில் மானாவாரி விவசாயம் நடக்கிறது. நான்கு நாட்களாக இப்பகுதியில் பலத்த மழை பெய்தது. காட்டாற்று ஓடைகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.வனப்பகுதிக்குள் பெய்த மழையால் சிற்றோடைகள், நீர் வீழ்ச்சிகளில் தண்ணீர் வரத்து ஏற்பட்டு வறட்சி நீங்கியுள்ளது. ஈரப்பதம் இருப்பதால் அடுத்த சில நாட்களுக்கு காட்டு தீ எரிய வாய்ப்பில்லை.விவசாயிகள் கூறுறியதாவது: கோடை துவக்கத்தில் நல்ல மழை பெய்துள்ளதால் வாழை, கரும்பு, தென்னை உள்ளிட்ட பயிர்களில் நல்ல மகசூல் கிடைக்கும். மானாவாரி நிலங்களில் சித்திரை

பட்ட விதைப்பிற்கு உழவு பணி மேற்கொள்ள இந்த மழை கை கொடுத்துள்ளது. தற்போது மலையடிவாரத்தை ஒட்டிய நிலங்களில் பயிரிட்டுள்ள தக்காளி, தட்டை பயிறு, அவரை பயிர்களுக்கு உரமிடும் பணி மும்முரமாக நடக்கிறது. தொடர்ந்து சில நாட்கள் மழை கிடைத்தால் வறட்சி நீங்கும், என்றனர்.

## <u>விவசாயிகள் கவனத்திற்கு</u>

தேனி : தேனி மாவட்ட தோட்டக்கலைத்துறை மற்றும் விவசாயத் துறைக்கு சொட்டுநீர் பாசன மானியம் வழங்க அரசு ரூ.80 லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இதுவரை ரூ.12 லட்சம் மானியம் பெறுவதற்கான அளவு விண்ணப்பங்களே வந்துள்ளன. மீதம் ரூ.68 லட்சம் நிதி இருப்பு உள்ளது. எனவே தேனி மாவட்ட விவசாயிகள் தங்கள் நிலங்களில் சொட்டுநீர் பாசனம் அமைக்க விரும்பினால் தோட்டக்கலைத்துறை, விவசாயத்துறையில் மார்ச் 31 க்குள் விண்ணப்பிக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## <u>ரூ.10 லட்சத்துக்கு சள் விற்பனை</u>

ஆத்தூர்:ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள், கூட்டுறவு விற்பனை சங்கத்தில், 10 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலத்தில், கடலூர், திருவண்ணாமலை, பெரம்பலூர், கள்ளக்குறிச்சி ஆகிய வெளி மாவட்டம் மற்றும் ஆத்தூர், அதன் சுற்றுவட்டார கிராம பகுதியைச் சேர்ந்த, 40 விவசாயிகள், 300 மூட்டை மஞ்சளை, விற்பனைக்கு கொண்டு வந்தனர்.இதில், விரலி மஞ்சள் குவிண்டால், 6,000 முதல், 9,800 ரூபாய் வரை, உருண்டை மஞ்சள் குவிண்டால், 5,500 முதல், 8,909 ரூபாய் வரை, பனங்காலி மஞ்சள் குவிண்டால், 9,909 முதல், 17 ஆயிரத்து, 15 ரூபாய்

வரை விற்பனையானது.ஏலத்தில், 10 வியாபாரிகள் கலந்து கொண்டு, 300 மூட்டை மஞ்சளை, 10 லட்சம் ரூபாய்க்கு வாங்கிச் சென்றனர்.

## ரூ. 1.50 கோடிக்கு மஞ்சள் வர்த்தகம்

திருச்செங்கோடு: திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், ஒரு கோடியே, 50 லட்சத்திற்கு, மஞ்சள் ஏலம் போனது. திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், பருத்தி, மஞ்சள், நிலக்கடலை, எள், ஆமணக்கு உள்ளிட்ட விவசாய உற்பத்தி பொருட்கள் விற்பனை செய்யபடுகிறது. மஞ்சள் வகைகள், தர்மபுரி மாவட்டம் அரூர், பொம்மிடி, ஈரோடு மாவட்டம் பவானி, அந்தியூர், சேலம் மாவட்டம் ஜலகண்டாபுரம், நங்கவள்ளி, மேட்டூர், ஆத்தூர், தம்மம்பட்டி, மலையாளபட்டி, பெரம்பலூர், துறையூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து விற்பனை வருகிறது. இந்நிலையில், நேற்று நடந்த ஏலத்தில், விரலி ரகம், குவிண்டாலுக்கு, அதிகபட்சமாக, 10 ஆயிரத்து, 339, குறைந்தபட்சமாக, 6,869 ரூபாய்க்கும், கிழங்கு மஞ்சள், அதிகபட்சமாக, 8,569, குறைந்தபட்சமாக, 5,899 ரூபாய்க்கும் ஏலம் போனது. அதேபோல், பனங்காலி ரகம், அதிக பட்சமாக, 14 ஆயிரத்து, 899, குறைந்தபட்சமாக, 6,569 ரூபாய்க்கு ஏலம் போனது. மொத்தமாக, ஒரே நாளில், 2,600 குவிண்டால் மஞ்சள் விற்பனை ஆனதில், ஒரு கோடி, 50 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

## விவசாயத்தில் அறிவியல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உற்பத்தியை பெருக்க கோரிக்கை

தர்மபுரி: "விவசாயத்தில் அறிவியல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, உற்பத்தியை பெருக்க, விவசாயிகள் தங்களை தயார்படுத்தி கொள்ள வேண்டும்," என, இஸ்ரோ முன்னாள் தலைவர் கஸ்தூரிரங்கன் கேட்டுக் கொண்டார். தர்மபுரி அடுத்த நல்லானூர் ஜெயம் இன்ஜினியரிங்

கல்லூரியில், 13வது பட்டமளிப்பு விழா, கல்லூரி கலாம் ஆடிட்டோரியத்தில் நடந்தது. கல்லூரி சேர்மன் ரமேஷ் தலைமை வகித்தார். டிரஸ்டி பார்வதி ரமேஷ், இயக்குனர் கோபிநாத், டீன் சுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இஸ்ரோ முன்னாள் தலைவரும், பெங்களூரு ராமன் ஆராய்ச்சி நிறுவன அறங்காவலருமான கஸ்தூரி ரங்கன் சிறப்பு விருந்தினராக பங்கேற்று பேசியதாவது: இந்தியாவில், கிராமங்கள் அதிகளவில் உள்ளது. இங்கு முக்கியமான தொழில் விவசாயம். ஆனால், விவசாயிகள் புதிய தொழில் நுட்பத்தை பயன்படுத்தாமல் இருப்பதால் உற்பத்தி குறைவாக உள்ளது. குறைந்த நிலங்களையும், குறைந்த மக்கள் தொகையுடை பல நாடுகள் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, விவசாய தொழில் சிறப்படைய செய்து உற்பத்தியை பெருக்கி வருகின்றன. இதேபோல், இந்தியாவிலும், விவசாயிகள் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, விவசாய தொழில் மேற்கொள்ள தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு, அவர் பேசினார். தொடர்ந்து, 692 மாணவ, மாணவியருக்கு பட்டங்களையும், பல்கலைக்கழக அளவில் சிறப்பிடம் பிடித்த, 13 மாணவருக்கு, சானறிதழ் வழங்கி வாழ்த்து தெரிவித்தார். துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### <u>பச்சை பயறு உற்பத்தியை பெருக்க விதை கிராம பயிற்சி முகாம்</u>

ஆற்காடு, : ஆற்காடு அருகே வேளாண்மைத் துறை சார்பில் பச்சைப்பயறு உற்பத்தியை பெருக்க விதை கிராம பயிற்சி முகாம்

நடந்தது. ஆற்காடு அடுத்த கிளாம்பாடியில் நடந்த முகாமிற்கு வேளாண்மை உதவி இயக்குநர் சு.பேபிபர்வதம் தலைமை தாங்கினார். துணை வேளாண்மை அலுவலர் எஸ்.செல்வன் முன்னிலை வகித்தார். முகாமில் ராணிப்பேட்டை விதைச்சான்று அலுவலர் சத்தியலட்சுமி கலந்து கொண்டு தரமான பயறு வகை, விதைகள் உற்பத்தி செய்வது குறித்தும், பூஞ்சாண நோய்களிலிருந்து பயிரினை பாது காக்க பச்சைப்பயறு விதையில் டிரைக்கோடெர்மாவிரிடி கலந்து விதை நேர்த்தி செய்வது குறித்து செயல்முறை விளக்கம் மூலம் பயிற்சியளித்தார். வேளாண்மைத்துறை சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கி கூறப்பட்டது. முகாமில் நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். முடிவில் சக்கரமல்லூர் உதவி வேளாண்மை அலுவலர் வெங்கடேசன் நன்றி கூறினார்.

## <u>கோடைக்கு இதமளிக்கும் தென்னந்தட்டி தயாரிக்கும் பணி மும்முரம்</u>

நத்தம், : நத்தம் பகுதிகளில் புன்னப்பட்டி, சத்தி ரம், முளையூர், சமுத்திரா பட்டி, சிறுகுடி போன்ற 100க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளது. இங்கு ஏராளமான தென்னை மரங்கள் பராமரி க்கப்பட்டு வருகிறது. இவற்றி லிருந்து கிடைக்கும் தென்னை மட்டைகளிலிருந்து தென்னங் கீற்றுகளை முடை யும் பணி நடைபெற்று வரு கிறது. தற்போது கோடை காலம் என்பதால் வெப்பத்தின் பிடியிலிருந்து விடுபடுவதற்காக தென்னங்கீற்று தட்டிகள் விற்பனை அதி களவு இருக்கும். இதனால் கோடை சீசன் துவங்கி உள்ள நிலையில், அவற்றை முடையும் பணி யில் தொழிலாளர்கள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்ற னர். இதுகுறித்து தொழி லாளி வெள்ளையம்மாள் கூறுகையில், கோடை சீசன் என்பதால் இந்த வேலை சுறுசுறுப்படைந்துள்ளது. 100 எண்ணிக்கை கொண்ட 4 அடி நீளமுள்ள தென்னங்கீற்று ரூ.250க்கு விற்பனை ஆகிறது. இவற்றை இங்கேயே சரக்கு வாகனங்களில் வந்து எடுத்து கொள்கின்றனர். ஒரு தொழிலாளி நாள்தோ றும் 50 லிருந்து 70 தென்னங்கீற்றுகள் வரை

முடையலாம். இப்போது தண்ணீர் பற்றாக்குறையாக இருந்த போ தும் ஆங்காங்கே தொட் டி கள் அமைத்து மட்டைகளை தண்ணீரில் மூழ்க வைத்து முடைவதற்கு தகுந்தவாறு பக்குவப்படுத்தி வருகிறோம். வறட்சி வந்தால் இந்த தொ ழில் செய்வது மிகுந்த சிரமம் ஆகும் என்றார்.

## <u>வருமானம் அதிகரிக்க கேழ்வரகு பயிரிடலாம்</u>

பழநி, : வருமானம் அதிகரிக்க கேழ்வரகு பயிரிடலாமென வேளாண் துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர்.கேழ்வரகு பயிரிட கோ 9, கோ(ரா) 14, கோ 15, பை யூர் (ரா) 2 ஆகியவை ஏற்ற ரகங்கள் ஆகும். ஆடி மற் றும் புரட்டாசி ஆகியவை கேழ்வரகு பயிரிட ஏற்ற பருவங் களாகும். நிலத்தை 2 முறை நன்கு உழவு செய்த பின்பு 3வது உழவில் தொழுஉரம் இட வேண்டும்.பொட்டாசியம் டை ஹேட்ரஜன் பாஸ்பேட் 20 கிராமுடன் 1 லிட்டர் நீர்கலந்த கரைசலில் விதைகளை 6 மணி நேரம் ஊறவைத்து உலர்த்திய பின் விதைக்க வேண்டும். நாற்றாங்கால் பயிரிட ஹெக்டேருக்கு 5 கிலோ விதையளவும் நேரடி விதைப்பிற்கு 10 முதல் 15 கிலோ விதையளவு வேண்டும். 18 முதல் 21 நாட்கள் வயதுடைய நாற்றுகளை குத்துக்கு 2 அல்லது 3 நாற் றுகள் வீதம் 15*15 சென்டிமீட்டர் இடைவெளியில் நடவு செய்யலாம். பரிந்துரைக்கப்பட்ட உர அளவான தழை, மணி, சாம்பல் சத்து க்களை ஹெக்டேருக்கு முறையே 90:45:45 கிலோ என்ற அளவில் இட வேண்டும். 2 கிலோ அசோஸ்பைரில்லம் மற்றும் 2 கிலோ பாஸ் போ பாக்டீரியத்தை மக்கிய தொழு உரத்துடன் கலந்து 1 ஹெக்டேர் நிலத் தில் பயிரிடலாம். விதைத்த 18ம் நாள் ஒரு களையும், 45வது நாள் மற்றொரு களையும் எடுக்க வேண்டும். 1 ஹெக்டேருக்கு 2 லிட்டர் பியூட்டாகுளோர் களைக்கொல்லியை 500 லிட்டர் தண்ணீருடன் கலந்து நாற்று நட்ட 3ம் நாள் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். கேழ்வரகை பூச்சிகள் பெரும்பாலும் தாக்குவதில்லை. எனினும், பருவ மாற்றத்திற்கு ஏற்ப வெட்டுப்புழுக்கள்,

தண்டு துளை ப்பான்கள், சாறு உறிஞ்சு கள், வேர் அசுவினி முதலிய பூச்சுகள் தாக்க லாம். வெட்டுப்புழுக்களைக் கட்டுப்படு த்த மால த்தியான் 200 மில்லி தண்ணீ ரில் கலந்து கொ ள்ள வேண்டும். தண்டுதுளை ப்பான் களை கட்டுப்படுத்த தூர்கட்டும் பருவத்திலும், பூக் கும் பருவத்திலும் இப்பூச்சிக்கொல்லியைப் பயன்படுத்தலாம். இதுதொடர் பான கூடுதல் தகவல்கள் விவசாயிகள் அந்தந்த பகுதி வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலத்தை அணுகலாமென வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## <u>உத்தமசோழபுரம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் தேங்காய், கொப்பரை ஏலம்</u>

சேலம், : சேலம் உத்தமசோழபுரம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் வரும் 13ம்தேதி தேங்காய் மற்றும் கொப் பரை ஏலம் நடக்கிறது. சேலம் விற்பனை குழுவின் கீழ் 19 ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் இயங்குகின்றன. இதில் சேலம் மாவட்டத்தில் 13 விற்பனை கூடங்களும், நாமக்கல் மாவட்டத்தில் 6விற்பனை கூடங்களும் உள்ளன. நெல், சோளம், கம்பு, ராகி, நிலக்கடலை, ஆமணக்கு, எள், பருத்தி, கழிவுபஞ்சு, புளி, கரும்பு, வெல்லம், மரவள்ளி, தேங்காய், உளுந்து, துவரை, பச்சைப்பயிறு மற்றும் மிளகாய் உள்ளிட்ட 17 விளைபொருட்கள், ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் ஏலம் விடப்படுகிறது. இந்த வகையில் வரும் 13ம்தேதி தேங்காய், கொப்பரை ஆகியவற்றுக்கான மறைமுக ஏலம் நடக்கிறது. இது குறித்து சேலம் விற்பனைக்குழு செயலாளர் செல்லதுரை தெரிவித்திருப்பது: சேலம் ஒழுங்குமுறை விற்பனை கூடம் மூலமாக தேங்காய், கொப்பரை ஆகியவற்றுக்கான மறைமுக ஏலம் வரும் வெள்ளிக்கிழமை (13ம்தேதி) காலை 11மணிக்கு உத்தமசோழபுரத்தில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நடக்கிறது. இதில் விவசாயிகள் தங்களது விளை பொருட்களான தேங்காய் மற்றும் கொப்பரையை எடுத்து வந்து மறைமுக ஏலத்தில்

கலந்து கொள்ளலாம். ஏலத்தில் கலந்து கொண்டு கொள்முதல் செய்யவும் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த ஏலத்தில் கலந்து கொள்பவர்கள், தங்களுடைய பெயரை முன்பதிவு செய்ய வேண்டும். இவ்வாறுசெல்லதுரைதெரிவித்துள்ளார்.

**<u>சேலத்தில் வெள்ளரிக்காய் விற்பனை அமோகம்</u>**

சேலம், : கொளுத்தும் வெயில் காரணமாக சேலத் தில் வெள்ளரிக்காய் விற் பனை சூடுபிடித்துள்ளது. சேலம் மாவட்டத்தில் ஆட்டையாம்பட்டி, காடையாம்பட்டி, வெள்ளாளகுண்டம், மேச்சேரி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து சேலம் கடைவீதிக்கு மூட்டை கணக்கில் வெள்ளரிக்காய் கொண்டு வரப்படுகிறது. இவ்வாறு வரும் வெள்ளரிக் காயை செவ்வாய்பேட்டை, அஸ்தம்பட்டி, கடைவீதி, பஸ் ஸ்டாண்ட் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த கூடை மற்றும் தள்ளுவண்டி சில்லரை வியாபாரிகள் வாங்கிச்சென்று வியாபாரம் செய்து வருகின்றனர். தற்போது வெயில் காரண மாக வெள்ளரி விற்பனை ஜோராக நடந்து வருகிறது. ஒரு கிலோ வெள்ளரிக்காய் ரூ50 முதல் ரூ60 வரை விற்பனை செய்யப்படுகிறது.

**<u>விவசாயிகளுக்கு நெல் நேர்த்தி தொழில் நுட்ப பயிற்சி முகாம்</u>**

ஈரோடு, :சித்தோடு ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விவசாயிகளுக்கு அறுவடைக்கு பின் நெல் நேர்த்தி தொழில்நுட்ப பயிற்சி வழங்கப்பட்டது. விளைபொருட்களை சந்தை படுத்துதல், தரம்பிரித்தல், சிப்பம் கட்டுதல், மதிப்பு கூட்டுதல், சந்தை நிலவரம் உள்ளிட்டவைகளை பற்றி வேளாண்மை உதவி இயக்குநர் சாத்தப்பன் பயிற்சி அளித்தார். ஒழுங்குமுறை விற்பனை கூடத்தின் பயன்கள், பொருளீட்டு கடன் திட்டம், குளிர்சாதன கிடங்குகளில் சேமித்தல் உள்ளிட்டவைகள் குறித்து விற்பனை கூட அதிகாரி கிருஷ்ணசாமி விளக்கி கூறினார். வேளாண் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் குறித்து சித்தோடு வேளாண்மை அலுவலர் ராஜாத்தியும், தேசிய உணவு பதப்படுத்தும்

இயக்கம், உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் அமைத்தல் குறித்து வேளாண் வணிக அலுவலர் சண்முகசுந்தரம் ஆகியோரும் விளக்கி கூறினர். உழவர் உற்பத்தியாளர் கம்பெனி அமைப்பது, கம்பெனி செயல்பாடுகள், விவசாயிகள் குழுக்களாக அமைத்து உற்பத்தியாளர் நிறுவனத்தில் உறுப்பினர்கள் பதிவு செய்வது, விளைபொருட்களை அதிக லாபத்தில் விற்பனை செய்வது உள்ளிட்டவைகள் குறித்து ஈரோடு துல்லிய பண்ணை உற்பத்தியாளர் கம்பெனி தலைமை நிர்வாக அலுவலர் ஜெயச்சந்திரன் விளக்கி கூறினார்.இப்பயிற்சி முகாமில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். முடி வில் வேளாண்மை உதவி அலுவலர் அமிருதீன் நன்றி கூறினார்.

<u>மாநில வேளாண்மைத்துறை சார்பில் விரிவாக்க செயல் திட்டம் தயாரிப்பு</u>

வேளாண்மைத்துறை சார்பில் மாநில வேளாண் விரிவாக்க செயல் திட்டம் தயாரித்தல் துவக்க விழா நடந்தது. மூன்று நாட்கள் நடக்கும் இவ்விழாவினை மாவட்ட கலெக்டர் சங்கர் துவக்கி வைத்து பேசியதாவது: தமிழக அரசு இரண் டாம் பசுமை புரட்சி மூலமாக வேளாண் உற்பத்தியை இரண்டு மடங்காகவும், உழவன் வருவாயை 3 மடங்காக உயர்த்துவதற்காகவும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் தெளிப்பு நீர் பாசனம், சொட்டு நீர் பாசனம், விவசாயிகளுக்கு விதைகளை மானிய விலையில் வழங்கும் திட்டம், மானிய விலையில் பசுமைக்குடில் அமைக்கும் திட்டம் என பல்வேறு திட்டங்கள் உள்ளன. மேலும் விவசாயிகளுக்காகவும் பல்வேறு நல திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. உழவர் எந்த பகுதியில் என்ன பயிர்களை சாகுபடி செய்யலாம், நல்ல மகசூலை பெறலாம். நோய் பூச்சிகள் தாங்கும் ரகங்கள் உள்ளனவா என்றும், ஒருங்கிணைந்த உர நிர்வாகம், ரசாயனம், உயிர் உரங்கள், ஒருங்கிணைந்த நீர் நிர்வாகம் தேவையான போது பூச்சி மருந்துகள் பயன்படுத்துவது குறித்தும் தெரிவிக்கப்படுகிறது. கால்நடைத்துறை, மீன்வளத்துறை, கூட்டுறவுத்துறை, வேளாண்மை பொறியியல் துறை போன்று பல்வேறு

துறைகள் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டம் அனைத்தையும் விவசாயிகள் பயன்படுத்தி கொண்டு உழவர்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைய வேண்டும்.இவ்வாறு அவர் பேசி னார். இந்நிகழ்ச்சியில் கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக வேளா ண்மை விரிவாக்க இயக்குநர் பொன்னுசாமி, மாநில வேளாண்மை விரிவாக்க இயக்குநர் வெள்ளைசாமி, துணை இயக்குநர் அண் ணாமலை, தேசிய பயிற்றுனர் சங்கரசுப்பிரமணியன் மற்றும் தமிழகம் முழுவதும் உள்ள வேளாண்மை, தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். முன்னதாக நீலகிரி மாவட்ட தோட்டக்கலை இணை இயக்குநர் மணி வரவேற்றார். முடிவில் உதவி இயக்குநர் ராம்சுந்தர் நன்றி கூறினார்.

**பண்டுதகாரன்புதூரில் வெள்ளாடு வளர்க்க இலவச பயிற்சி**

கரூர், : கரூர் மாவட் டம் பண்டுதகாரன்புதூரில் அமைந்துள்ள கால் நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் வரும் 10ம்தேதி (செவ்வாய்) ஒருநாள் வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி நடைபெற உள்ளது. இப்பயிற்சியில் ஆடுகளுக்கு கொட்டகை அமைப்பு, ஆடுகளை தேர்வு செய்தல், தீவன பராமரிப்பு, நோய் தடுப்பு முறைகள், இதர பராமரிப்பு முறைகள், பொருளாதாரம், பரண் மேல்ஆடு வளர்ப்பில் உள்ள சாதக பாதங்கள் குறித்த தலைப்புகளில் பயிற்சி வழங்கப்பட உள்ளது. பயிற்சியில் கலந்துகொள்வோர் காலை 10மணிக்கு வந்து பயிற்சி மைய வளாகத்திற்கு வந்துவிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இப்பயிற்சி யில் கலந்து கொள்ள விரும்புவோர் அலு வலக தொலை பேசி (04324 294335) தொடர்புகொண்டு முன்பதிவு செய்துகொள்ளுமாறு மைய இணை பேராசிரியர் அகிலா தெரிவித்துள்ளார்.

**கதர் வாரியத்தால் பனை பொருள் விற்பனை அதிகரிக்க நடவடிக்கை**

க.பரமத்தி, : கதர் கிராம நல வாரியத்தில் பனை பொருட்களின் விற்பனையை அதிகரிக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்

என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். க.பரமத்தி ஒன்றியத்தில் அணைப்பாளையம், அஞ்சூர், ஆரியூர், அத்திப்பாளையம், சின்னதாராபுரம், எலவனூர், கூடலூர் கிழக்கு, மேற்கு, கார்வழி, காருடையம்பாளையம், கோடந்தூர், குப்பம், மொஞ்சனூர், முன்னூர், புஞ்சைகாளகுறிச்சி, நடந்தை, நெடுங்கூர், க.பரமத்தி, பவித்திரம், நஞ்சைகாளகுறிச்சி, புன்னம், ராஜபுரம், சூடாமணி, தென்னிலை கிழக்கு, மேற்கு, தெற்கு, தொக்குப்பட்டி, துக்காச்சி, தும்பி வாடி, விஸ்வநாதபுரி ஆகிய 30 ஊராட்சிகள் உள்ளன. இதில் அனைத்து ஊராட்சிகளிலும் பரவலாக பனைமரங்கள் உள்ளன. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் கிராமங்களில் உள்ள விவசாயிகள் பனை மரங்களை கொண்டு வீடு கட்டியும், பனை ஓலைகளில் வீடு களை வேய்ந்தும் வாழ்ந்து வந்தனர். இதனால் கோடைக்காலங்களில் வரும் வெக்கை, அம்மை நோய் தாக்கம் சற்று குறை வாக இருந்தது. பனை மரங்களில் இருந்து கிடைக்கும் பனை சோறு, நுங்கு, பதநீர் ஆகியவைகளை பலரும் விற்பனை செய்து பிழைத்து வந்தனர். பனை ஓலைகளில் இருந்து விசிறி, ஓலை பெட்டி, பனைபாய் போன் றவை தயாரிப்பது, பல்வேறு நிகழ்ச்சிகளின்போது தோரண வாயிலில் நுங் குவை தொங்கவிட்டு அழகு பார்ப்பது, மேலும் திருமண விழாவில் கிப்ட் கொடுக்கும் பல்வேறு பொருட்களும் பனை ஓலைகளால் செய்ய பயன்படுத்தப்படுகிறது. தற்போது பதநீர் இறக்கும் தொழிலாளர்கள் வேறு தொழில்களுக்கு மாறிவிட்டனர். இதனால் பனை மரங்கள் செங்கல் சூளைகளுக்கும், பல்வேறு உணவு விடுதிகளுக்கும் எரிபொருளாக பயன்படுத்தப்படுகிறது. இதுபற்றி விவசாயி ஒருவர் கூறுகையில், பதநீர் அருந்துவதன் மூலம் மனிதனுக்கு இயற்கையாகவே கால்சியம் சத்து கிடைத்தது. இதனை பருகி வந்தவர்கள் இதனால் 70 வயதிலும் கூட அசராமல் நடந்து சென்று கூலித்தொழிலுக்கு சென்று திரும்புவர். ஆனால், தற்போது 50 வயதாகி விட்டாலே கால்சியம் சத்து குறைவால் கால் முட்டியில் வீக்கம், கால் வலி போன்ற நோய் களால்

பலரும் அவதிப்பட்டு வருவதை நாம் இன்றும் கிராமப்புறங்களில் காண முடிகிறது. எனவே, சத்து மிகுந்த பொருட்களை தரும் பனை மரத்தை பாதுகாக்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் கதர் கிராம நலவாரியத்தில் பனை பொருட்களின் விற்பனையை அதிகரிக்க அரசு உரிய நடவடிக் கையை எடுக்க அரசு முன் வர வேண்டும் என்றார்.

<u>வட்டார விவசாயிகள் ஆலோசனை குழு கூட்டம்</u>

ஜெயங்கொண்டம், : ஜெயங்கொண்டம் வட்டார விவசாயிகள் கூட்டம் நடந்தது. ஜெயங்கொண்டம் வட்டார வேளாண் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் அட்மா திட்டத்தின்கீழ், வட்டார விவசாயிகள் கூட்டம் ஜெயங்கொண்டம் வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தில் நடைபெற்றது. வட்டார விவசாயிகள் ஆலோசனைக்குழு தலைவர் செல்வராஜ் தலைமை வகித்தார். வேளாண் உதவி இயக்குனர் இளங்கோவன் முன்னிலை வகித்தார். வேளாண் அதிகாரி அமுதன் துறை திட்டங்கள் மற்றும் மானிய விபரங்கள் குறித்தும், வேளாண் இடுபொருட்களை பயன்படுத்தும் அளவு மற்றும் முறைகள், விளக்குபொறிகளை பயன்படுத்தும் முறைகள் குறித்தும் விளக்கி பேசினார். வட்டாரத் தொழில்நுட்ப மேலாளர் மீனாட்சி, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் முருகன், சவுந்திரராஜன் ஆகியோர் அட்மா திட்ட செயல்பாடுகளை விளக்கிக் கூறினர். சோழமாதேவி கிரீடுவேளாண் அறிவியல் தொழில்நுட்ப வல்லுனர் தாசிஸ் அருண் மண் ஆய்வு, மண் ஆய்வின்படி உரமிடுதலின் அவசியம் குறித்து விளக்கினார். பட்டு வளர்ச்சித் துறை இளநிலை ஆய்வாளர் ஜோதி துறை திட்டங்கள் மற்றும் மானிய விபரங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார். தோட்டக்கலை மற்றும் வேளாண் பொறியியல் துறை சார்ந்த அதிகாரிகள் கலந்துகொண்டு துறை திட்டங்கள் மற்றும் மானிய விபரங்கள் குறித்து பேசினர். கூட்டத்தில் கலந்துகொண்ட உழவர் நண்பர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டது. வேளாண் உதவி

அதிகாரிகள் கவிதா, பாபு, மணிகண்டன், கோவிந்தராஜ், பழனிவேல் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## எள் பயிரை தாக்கும் பூச்சி, நோய்களை கட்டுப்படுத்தும் வழிமுறை

சேதுபாவாசத்திரம், : சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் சாகுபடி செய்துள்ள எள் பயிரை தாக்கும் பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்தும் வழிமுறை குறித்து விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. சேதுபாவாசத்திரம் வட் டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கை: சேதுபாவா சத்திரம் வட்டாரத்தில் தற்சமயம் மாசிபட்ட எள் வளர்ச்சி மற்றும் பூக்கும் பருவத்தில் உள்ளது. இப்பயிர்களை தாக்கும் பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்துவது அவசியமாகும். பயிர்களை தண்டு பினைப் பான் மற்றும் காய் பினைப் பான் தாக்கி வருகிறது. இவை தண்டு பகுதியை ஒன்றோடு ஒன்றாக பிணைத்து துவாரமிட்டு சேதப்படுத்தியும், வளர்ந்த பயிர்களில் இளம் காய்களில் துவாரமிட்டு பூ மற்றும் பிஞ்சுகளை சேதப்படுத்தி மகசூல் இழப்பு ஏற்படுத்துகிறது. இவைகளை கட்டுப்படுத்த விதைத்த 25, 35 மற்றும் 50வது நாட்களுக்கு பிறகு பாசோலோன் 400 மில்லி அல்லது மானோகுரோட்டபாஸ் 400 மில்லி அல்லது கார்பரில் 50 சத தூள் 400 கிராம் இதில் ஏதாவது ஒன்றை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கர் பரப்பில் மாலை வேளையில் கைதெளிப்பானால் தெளிக்க வேண்டும். அல்லது 2 சதவீதம் வேப்பெண்ணெய் கரைசலை 2 முறை தெளிக்க வேண்டும். மற்றொரு சேதம் விளைவிக்கக்கூடிய பூச்சிகளில் காவடி புழுவும் ஒன்று. இப்புழு 60 மி.மீ நீளமாகவும், கருமை கலந்த பழுப்பு உடலில் செம்புள்ளிகளுடனும் கருப்பு தலை யுடன் காவடி போன்று வளைந்து செல்லும். இலை களை வெகுவிரைவாக தின்று அழித்துவிடும். இதை கட்டுப்படுத்த ஏக்கருக்கு 750 மில்லி மாலத்தியான் அல்லது 400 மில்லி பெண் தியான் மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். நோய்களை பொருத்தவரை வேர் அழுகல்

நோய் மற்றும் பூவிலை நோயாகும். பூவிலை நோய் தாக்கிய செடிகளை முற்றிலும் பிடிங்கி அழித்துவிட வேண்டும். வேர் அழுகல் நோயை கட்டுப்படுத்த விதை விதைக்கும் போதே விதையுடன் டிரைக்கோடெர்மா விரிடின் என்ற பூசாண கொல்லி மருந்தை ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் வீதம் கலந்து விதைக்க வேண்டும். விதைத்து செடி வளர்ந்த பின் இந்நோய் தோன்றினால் 1 சத கார்பன்டாசிம் (1 லிட்டர் தண்ணீருக்கு 1 கிராம் மருந்து) மருந்தை வேரின் அடிப்பாகத்தில் வேர் நன்றாக நனையுமாறு ஊற்ற வேண் டும். இவ்வாறு எள் பயிரை தாக்கும் பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்தலாம்.

## வேளாண்மை அறிவியல் நிலையத்தில் ஒருங்கிணைந்த எலி கட்டுப்பாடு பயிற்சி

நீடாமங்கலம்,: திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த எலி கட்டுப்பாடு பயிற்சி முகாம் தொடங்கியது. பயிற்சியை கலெக்டர் மதிவாணன் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சிக்கு மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் மயில்வாகனன் முன்னிலை வகித் தார். நிகழ்ச்சியில் நீடாமங்கலம் ஒன்றியகுழு தலைவர் ராஜேந்திரன், தஞ்சை மத்திய கூட்டுறவு வங்கி துணைத் தலைவர் சங்கர், வேளாண்மை இணை இயக்குனர் இளஞ்செழியன் உள்ளிட்ட நீடாமங்கலம் மற்றும் வலங்கைமான் வட்டார விவசாயிகள் 40பேர் கலந்து கொண்டனர். ஒருங்கிணைந்த எலி கட்டுப்பாடு கையேட்டை கலெக்டர் வெளியிட்டார். பயிற்சியில் எலிகளின் வகைகள், அவற்றின் வாழ்க்கை, அவை ஏற்படுத்தும் சேதம் பற்றி முதல்நாள் பயிற்சியில் விளக்கப் பட்டது. முனைவர்கள் ரமேஷ், நக்கீரன் பயிற்சி அளித்தனர். முனைவர் கவிதாஸ்ரீ நன்றி கூறினார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## விற்பனை கூடங்களில் இருப்பு வைக்கப்படும் விளைபொருட்களுக்கு பொருளீட்டு கடன்



ராமநாதபுரம், விற்பனை கூடங்களில் இருப்பு வைக்கப்படும் விளைபொருட்களுக்கு உழவர்கள் பொரு ளீட்டு கடன் பெற்றுக்கொள்ள லாம்.

நெல்கொள்முதல்

உழவர்கள் தங்களது விளை பொருட்களை அறுவடை காலங்களில் விற்பனை செய் யும்போது விலை மிக குறை வாக உள்ளது. ஆனால் அதே விளைபொருள் சில மாதங்க ளுக்கு பின்பு விலை அதிகமாக உள்ளது. எனவே, விளை பொருட்களை அறுவடை காலங்களில் உடனே விற் பனை செய்யாமல் சிறிது காலம் சேமித்து விற்பனை செய்தால் நல்ல விலை கிடைக்க வாய்ப்பு உள்ளது. தற்போது ராமநாதபுரம் மாவட்டத்தில் அதிகளவில் சாகுபடி செய்யப்படும் நெல் லினை இடைத்தரகர்கள் குறுக்கீடின்றி அரசே கொள் முதல் செய்திட நேரடி கொள் முதல் மையங்கள் அமைக்கப் பட்டு செயல்பட்டு வருகின் றனை. இந்த மையத்தில் சாதா ரண ரகம் கிலோ ஒன்றுக்கு ரூ.14.10 வீதமும், சன்ன ரகம் கிலோ ஒன்றுக்கு ரூ.14.70 வீதமும் கொள்முதல் செய்யப்படுகிறது. இந்த வசதியினை உழவர்கள் பயன்படுத்தி கொள்ளலாம்.

பொருளீட்டுகடன்

உழவர்களது விளை பொருட்களுக்கு உரிய விலை கிடைத்திட வேண்டும் எனும் நோக்கத்தோடு ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் ராமநா தபுரம் மாவட்டத்தில் ராமநா தபுரம், பரமக்குடி, கமுதி, ஆர்.எஸ்.மங்கலம்,

மற்றும் முதுகுளத்துõர் ஆகிய இடங் களில் செயல்பட்டு வருகின் றன. இங்கு உழவர்கள் தங்க ளது விளைபொருட்களை இடைத்தரகர்களது குறுக்கீ டின்றி விற்பனை செய்திட சேமிப்புக்கூட வசதி, பரிவர்¢த் தனை கூட வசதி இலவச தராசு வசதி, அன்றாட சந்தை நிலவரத்தை அறிய வசதி செய்து தரப்படுகிறது. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் இருப்பு வைக்கும் விளைபொருட்களின் மதிப் பில் 75 சதம் பொருளீட்டு கடன் அதிகபட்சமாக ரூ.2 லட்சங்கள் வரை வழங்கப்படு கிறது. இந்த கடனுக்கு முதல் 15 நாட்களுக்கு வட்டியில்லை. அதற்குப்பின் 5 சதவீத வட்டி வசூலிக்கப்படும். உடனடி பணத்தேவை உள்ள உழவர் கள் இந்த வசதியினை பயன் படுத்தி கொள்ளலாம். உழவர் கள் ஆறு மாதங்கள் வரை தங் களது விளை பொருட்களை சேமிக்க ஒழுங்கு முறை விற்ப னைக் கூடங்களை பயன்படுத்திக் கொள்ளலாம்.

முண்டுமிளகாய்

நெல் பயிருக்கு அடுத்தபடி யாக அதிக பரப்பில் சாகு படி செய்யப்படும் முண்டு மிள காயினை அதன் தரம், மற்றும் நிறம் கெட்டுப் போகாதவாறு சேமித்து விற்பனை செய்திட பரமக்குடி ஒழுங்குமுறை விற் பனைக்கூட வளாகத்தில் 100 டன் மற்றும் கமுதி ஒழுங்கு முறை விற்பனைக்கூட வளா கத்தில் 25 டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன கிட்டங் கிகள் அமைக்கப்பட்டு செயல் பட்டு வருகின்றன. முண்டு மிளகாய் சாகுபடி செய்துள்ள உழவர்கள் இவ்வசதியினை பயன்படுத்தி கொள்ளலாம். ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் உள்ளூர் மற்றும் வெளியூர் வியாபாரிகளை வர வழைத்து விளைபொருட் களை கொள்முதல் செய்திட வும், உடனடி பணப்பட்டு வாடா செய்திடவும் நடவ டிக் கைகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன. எனவே உழவர் கள் அரசு ஏற்படுத்தி தரும் வசதிகளை உபயோகப்படுத்தி பயனடையுமாறு ராமநாதபு ரம் மாவட்ட கலெக்டர் நந்த குமார் தெரிவித்தார்.

<u>**விவசாயிகளுக்கு பயிர் விளைச்சல் போட்டி வேளாண்மை அதிகாரி தகவல்**</u>



நெல்லை, விவசாயிகளுக்கு பயிர் விளைச்சல் போட்டி நடைபெற உள்ளதாக, நெல்லை மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்கூறிஇருப்பதாவது:-

பயிர்விளைச்சல்போட்டி

தற்போது நெல்லை மாவட்டத்தில் நெல், பயறுவகை பயிர்கள் அறுவடை நடந்து வருகிறது. அறுவடை தேதிக்கு முன்பாக நல்ல மகசூல் கிடைக்கும் என எண்ணும் விவசாயிகள், மாவட்ட அல்லது மாநில அளவிலான பயிர் விளைச்சல் போட்டியில் கலந்து கொள்ளலாம். இதற் கான கட்டணம் குறைவு. நெற் பயிருக்கு மாநில அளவு பதிவுக்கட்டணம் ரூ.100. பிற பயிர்களான மக்காச்சோளம், உளுந்து ஆகிய பயிர்களுக்கு பதிவு கட்டணம் ரூ.50 ஆகும். மாவட்ட அளவில் பயிர் விளைச்சல் போட்டியில் கலந்து கொள்ள நெற்பயிருக்கு ரூ.50-ம், பிற பயிர்களான சோளம், மக்காச்சோளம், உளுந்து ஆகிய பயிர்களுக்கு ரூ.25-ம் மட்டுமே பதிவு கட்டணமாகும். மாநில மற்றும் மாவட்ட அளவு பயிர் விளைச்சல் போட்டிகள் தனித்தனியாக நடத்தப்படும். இப்போட்டியில் நில உரிமைதாரர்களும், குத்தகைதாரரும் கலந்துகொள்ளலாம். மாநில அளவிலான போட்டிகளில் கலந்துகொள்ள நாளை (10-ந் தேதி)யும், மாவட்ட அளவு போட்டிகளில் கலந்துகொள்ள வருகிற 15-ந் தேதியும் கடைசிநாளாகும்.

ரொக்கப்பரிசு

பயிர் விளைச்சல் போட்டியில் கலந்துகொண்ட விவசாயிகளின் வயலில்

50 சென்ட் தேர்வு செய்யப்பட்டு, வேளாண் அதிகாரிகள் மற்றும் விவசாய பிரதிநிதிகள் முன்னிலையில் அறுவடை செய்யப்படும். அதன் மகசூல் அதிகாரிகள் முன்னிலையில் மதிப்பீடு செய்யப்படும். மாநில போட்டியில் அதிக மகசூல் பெறும் முதல் 2 விவசாயிகளுக்கு பரிசுகள் வழங்கப்படும். நெற்பயிருக்கு மாநில அளவில் முதல் பரிசாக ரூ.25 ஆயிரமும், 2-வது பரிசாக ரூ.15 ஆயிரமும் வழங்கப்படும். பிற பயிர்களான மக்காச்சோளம் மற்றும் உளுந்து பயிர்களுக்கு முதல் பரிசாக ரூ.15 ஆயிரமும், 2-வது பரிசாக ரூ.10 ஆயிரமும் வழங்கப்படும். மாவட்ட அளவில் பயிர் விளைச்சல் போட்டியில், நெற்பயிருக்கு முதல் பரிசாக ரூ.15 ஆயிரமும், 2-வது பரிசாக ரூ.10 ஆயிரமும், பிற பயிர்களான சோளம், மக்காச்சோளம், உளுந்து ஆகிய பயிர்களுக்கு முதல் பரிசாக ரூ.10 ஆயிரமும், 2-வது பரிசாக ரூ.5 ஆயிரமும் வழங்கப்படும். எனவே விவசாயிகள் தங்கள் வட்டார வேளாண்மை உதவி இயக்குனரை அணுகி பயிர் விளைச்சல் போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அவர் கூறி உள்ளார்.